**STC No. 311/2022**
**Date 28.03.2024**
**PW : 1**
**பெயர் - சரவண ராஜா த/பெ,**
சாட்சியின் குறுக்கு விசாரணை

நான் டிப்ளோமோ மெக்கானிக் இன்ஜினியரிங் படித்துள்ளேன். ஆரல்வாய்மொழியில் உள்ள CAPE கல்லூரியில் 2012 ஆம் ஆண்டு படித்து முடித்தேன். எனக்கு தற்போது திருமணம் ஆகவில்லை. நான் பிரமாண வாக்குமூலத்தில் தெரிவித்துள்ள விலாசம் தான் எனது நிரந்தர விலாசம் என்றால் சரிதான். மேற்படி பிரமாண வாக்குமூலத்தில் உள்ள முகவரியல் தான் நான் எனது பெற்றோருடன் வசித்து வருகிறேன் என்றால் சரிதான்.

இவ்வழக்கின் எதிரியை எத்தனை வருடமாக தெரியும் என்றால் அவரது குடும்பத்தில் உள்ள நபர்கள் அனைவரையும் 10 வருடத்திற்கு மேலாக தெரியும். எதிரியின் சொந்தத ஊர் தெரியாது. எதிரியின் அப்பா பெயர் தெரியாது. எதிரியின் கணவர் மற்றும் அவருடைய உடன்பிறந்தவர்களின் விபரம் தெரியும். எதிரியின் கணவர் பெயர் கண்ணன். கண்ணனையும் 10 வருடமாக தெரியும்.

தற்போது எதிரியும் நீங்களும் ஒரே தெருவில் வசிக்கவில்லை என்றால் சரிதான். எதிரியின் வீட்டிற்கும் உங்கள் வீட்டிற்கும் தற்போது 2 கி.மீ தூரம் இருக்கும். எதிரியோ, கணவரோ அவரின் உறவினரோ எனது சமூகத்தினை சார்ந்தவர் இல்லை என்றால் சரிதான். நீங்கள் எந்த காரியத்தினையும் உங்கள் அப்பாவிற்கு தெரியாமல் செய்யமாட்டீற்கள் என்றால் எனது தனிபட்ட விபரங்களை நானே முடிவு எடுப்பேன் சில காரியங்களை எனது தந்தையிடம் கேட்டு முடிவு எடுப்பேன்.

நீதிமன்றத்திற்கு இன்று எனது தந்தையுடன் வந்துள்ளேன் என்றால் சரிதான். இவ்வழக்கு விபரம் உங்கள் தந்தைக்கு தெரியும் என்றால் சரிதான். இவ்வழக்கிற்கு வழக்கறிஞர் வைத்து கொடுத்தவர் உங்கள் தந்தை என்றால் சரிதான் ஆனால் அந்த வழக்கறிஞருடன் எனக்கு பழக்கம் உண்டு. நீங்கள் உங்கள் அப்பாவினை சார்ந்து உள்ளீற்கள் என்றால் இல்லை நான் விவசாயம் மற்றும் கார் விற்பனை செய்யும் தொழில் செய்து வருகிறேன். விவசாயம் செய்யும் நிலம் உங்களுடையதா என்றால் சில நிலங்கள் எனது தாத்தாவிற்கு சொந்தமானது சில நிலங்களை நான் ஒத்திக்கும் எடுத்து செய்து வருகிறேன்.

தாத்தாவிற்கு சொந்தமான நிலங்களின் சர்வே எண் தற்போது எனக்கு ஞாபகமில்லை. எதிரி படித்த கல்வி விபரம் எனக்கு தெரியாது. அவருக்கு ஆங்கிலம்

தெரியுமா என்றால் அவருக்கு அனேகமாக ஆங்கிலம் தெரிந்திருக்க வாய்ப்பில்லை. எதிரி வேலைக்கு செல்லாமல் வீட்டில் தான் உள்ளார் என்றால் சரிதான். எதிரி அவரின் கணவர் வருமானத்தினை சார்ந்து தான் உள்ளார் என்று உங்களுக்கு தெரியும் என்றால் சரிதான். எதிரி அரசாங்கத்தால் அளிக்கப்பட்ட நிலத்தில் தான் வீடு கட்டி குடியிருந்து வருகிறார் என்றால் சரிதான்.

எதிரி உங்களிடம் எந்த தேதியில் கடன் கேட்டார் என்றால் 16/11/2021 ஆம் தேதி கேட்டார். எதிரி கடன் கேட்ட தேதியில் உங்கள் வங்கி கணக்கில் எவ்வளவு பணம் இருந்தது என்றால் ஞாபகமில்லை. மேற்படி தேதியில் உங்கள் கைவசம் எவ்வளவு பணம் இருந்தது என்றால் வாழைக்காய் விற்பனை செய்ததில் சுமார் ரூ.1,25,000/- க்கு மேல் இருந்தது. எதிரிக்கு கொடுத்த பணம் என் கையிலிருந்த பணத்துடன் சேர்ந்து எனக்கு வரவேண்டிய பணத்தினை பெற்று எதிரியிடம் அளித்தேன்.

எனக்கு வர வேண்டிய பணத்தினை நான் எந்த தேதியில் பெற்றேன் என்றால் 16/11/2021 ஆம் தேதி மாலை பெற்றேன். எதிரியிடம் மறுநாள் 17/11/2021 ஆம் தேதி எங்கள் வீட்டில் வைத்து பணம் கொடுத்தேன். எதிரியிடம் நான் பணம் அளிக்கும் போது என்னுடன் வீட்டில் உடன் யார் இருந்தார்கள் என்றால் நான், எனது தங்கை, தங்கையின் கணவர் மற்றும் தங்கை பசங்கள் இருந்தார்கள்.

நான் பணம் அளித்த தேதியன்று எனது அப்பா உடனிருந்தாரா என்றால் இல்லை ஆனால் உள்ளூரில் தான் இருந்தார். பணம் வாங்க எதிரியுடன் யார்யார் வந்தார்கள் என்றால் எதிரி மட்டும் தான் வந்தார். எதிரிக்கு பணம் அளித்த விபரம் வேறுயாருக்கு தெரியும் என்றால் எதிரியின் கணவர் மற்றும் அவருடைய மாமியாருக்கு தெரியும். எதிரியின் கணவரும் எதிரியும் சேர்ந்து தான் குடும்ப செலவிற்கு பணம் கேட்டார்கள்.

எதிரி அளித்த காசோலை எண் 525263 ஆகும். மேற்படி காசோலையில் பெயர் , தேதி, பணத்தின் எண்ணம் மற்றும் இதர விபரங்களை யார் எழுதினார் என்றால் மேற்படி காசோலையை எதிரி எழுதி எடுத்துவந்தார். மேற்படி காசோலையை எதிரி உங்கள் முன்னால் எழுதவில்லை என்றால் சரிதான். மேற்படி காசோலை விபரங்களை யார் எழுதி கொடுத்தார்கள் என்ற விபரத்தினை கேட்கவில்லை வாங்கிய பணத்திற்கு காசோலை கொடுத்ததால் அதை பற்றி கேட்க அவசியமில்லை.

புகார் வாக்கமூலம் மற்றும் பிரமாண வாக்குமூலத்தில் விவசாய கூலி வேலை செய்வதாக தான் தெரிவித்துள்ளேன் என்றால் சரிதான். கூலி வேலை யாரிடம் செய்து வருகிறேன் என்றால் எனக்கு வேலை இல்லை என்றால் அழைத்த

வேலைக்கு செல்வேன். கூலி வேலைக்கு செல்லும் போது உங்களுக்கு எவ்வளவு சம்பளம் அளிப்பார்கள் என்றால் ரூ.1000/- அல்லது ரூ.500/- கிடைக்கலாம் வேலையை பொறுத்து. உங்களுக்கு இராதாபுரத்தில் உள்ள வங்கியில் கணக்கு உள்ளதா என்றால் தமிழ்நாடு கிராம வங்கியில் கணக்கு உள்ளது.

நீங்கள் தனிபட்ட முறையில் யாருக்கும் கடன் கொடுத்துள்ளீற்களா என்றால் கடன் கொடுத்தது கிடையாது கைமாற்றாக கடன் கொடுப்பேன். எத்தனை நபர்களுக்கு கைமாற்றாக கடன் கொடுத்துள்ளேன் என்றால் ஞாபகமில்லை கொடுப்பேன் திரும்ப தருவார்கள். கைமாற்றாக பணம் கொடுக்கும் போது நான் ஆவணங்களை எதுவும் பெறுவேனா என்றால் கொடுக்கும் பணமத்தினை பொறுத்தது.

எவ்வளவு பணம் கொடுத்தால் ஆவணங்களை கேட்பேன் என்றால் ரூ.1 லட்சத்திற்கு மேல் என்றால் ஆவணம் கேட்பேன். சாட்சி ஆவணம் கேட்பேன் உறுதியாக கேட்கமாட்டேன். பொதுவாக என்னென்ன ஆவணத்தினை கேட்பிற்கள் என்றால் நான் கைமாற்றாக பணம் கொடுக்கும் தொழில் செய்யாத காரணத்தினால் அதை பற்றி சரியாக தெரியாது. ஆனால் பொதுவாக கிரைய ஆவணம் அல்லது காசோலை கேட்பேன் அதுவும் கடன் பெறுபவர் தந்தால் வாங்குவேன்.

உங்கள் அப்பா பணம் நபர்களுக்கு கடன் கொடுத்துள்ளார் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. உங்கள் அப்பா கொடுக்கல் வாங்கல் செய்யும் தொழிலுக்கு உரிய உரிமம் பெறவில்லை என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. நான் வருமான வரி தாக்கல் செய்கிறேன் என்றால் சரிதான். நீங்கள் வருமான வரி தாக்கல் செய்த விபரத்தினை நீதிமன்றத்தில் தாக்கல் செய்ய முடியுமா என்றால் செய்ய முடியும். எதிரிக்கு அளித்த பணம் வருமான வரி கணக்கில் காட்டி உள்ளேனா என்றால் விவசாயம் மூலம் வந்ததால் அதனை வருமான வரியில் காட்ட வேண்டிய அவசியமில்லை.

நீங்களும் உங்கள் அப்பாவும் நெருங்கி தான் உள்ளீற்கள் என்றால் சரிதான். உங்கள் அப்பா இது வரை எத்தனை இலட்சம் ரூபாய் கடன் அளித்துள்ளார் என்று தெரியுமா என்றால் தெரியாது. உங்கள் அப்பா கடன் அளிக்கும் போது ஆவணம் வாங்குவாரா என்றால் அவரிடம் தான் கேட்க வேண்டும் எனக்கு தெரியாது. நீங்கள் கைமாற்றாக அளிக்கும் பணத்தினை ரொக்கமாக தான் அளிப்பிற்களா அல்லது பேங்க் மூலம் பரிவர்த்தனை செய்வீற்களா என்றால் ரொக்கமாக தான் கொடுப்பேன்.

கார் விற்பனை செய்வதற்கு அலுவலகமோ, அனுமதி பெற்று செய்யவில்லை

கேட்கும் நபருக்கு வாங்கி கொடுப்பேன். அதற்கு அவர்கள் கமிஷன் கொடுப்பார்கள். கார் வாங்கி கொடுப்பதற்கு வரும் பணத்தினை நான் ரொக்கமாக தான் பெறுவேன். எதிரியின் மீது உங்கள் அப்பா காசோலை வழக்கு தாக்கல் செய்துள்ளார் என்ற விபரம் தெரியுமா என்றால் தெரியாது.

இந்த வழக்கிற்கும் உங்கள் அப்பா இராதாபுரம் நீதிமன்றத்தில் தாக்கல் செய்த வழக்கினையும் ஒரே வழக்கறிஞர் தான் நடத்தி வருகிறார் என்றால் வேறொரு வழக்கறிஞர் வழக்கு நடத்தி வருகிறார் இவர் மூலமாக தான்வருகிறார். எதிரிக்கு எதிரராக இராதாபுரம் நீதிமன்றத்தில் உங்கள் அப்பா தாக்கல் செய்த வழக்கின் எண் STC NO.. 446/2023 என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது.

மேற்படி இராதாபுரம் நீதிமன்றத்தில் வழக்கினை தாக்கல் செய்யும் முன்பு இவ்வழக்கின் வழக்கறிஞர் தான் உங்கள் தந்தை சார்பாக அறிவிப்பு அனுப்பி உள்ளார் என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது. எனது தந்தை எதிரிக்கு பணம் அளித்துள்ள விபரத்தினை தெரிவித்துள்ளாரா என்றால் தெரிவித்துள்ளார். ஆனால் எதிரியின் மீது வழக்கினை தாக்கல் செய்த விபரத்தினை எனது அப்பா என்னிடம் தெரிவிக்கவில்லை.

ஒரே வீட்டில் எனது தந்தையுடன் ஒன்றாக குடியிருந்து வருவதால் மேற்படி இராதாபுரம் நீதிமன்றத்திற்கு சென்று விபரத்தினை தெரிவிப்பாரா என்றால் தெரிவித்தது கிடையாது நானும் அவருடைய தனிபட்ட விபரத்தினை கேட்டதில்லை. எதிரியின் கணவர் டைல்ஸ் கான்ட்ரக்ட் எடுக்கும் தொழில் செய்து வருகிறார். இவ்வழக்கின் எதிரி திருநெல்வேலி அரசு மருத்துவமனையில் மனநிலை சம்பந்தமான சிகிச்சை பெற்ற வருகிறார் என்ற விபரம் தெரியுமா என்றால் அவர் மாத்திரை சாப்பிட்டு வருகிறார் என்று தெரியும் எதற்காக சாப்பிடுவார் என்று எனக்கு தெரியாது.

எதிரி மாத்திரை சாப்பிட்டு வருவார் என்ற விபரத்தினை அவரது குடும்ப உறுப்பினர் தெரிவித்துள்ளார் அவர் வாங்கும் போதும் நான் பார்த்துள்ளேன். சாப்பிடும் போது கேட்டதற்கு உடலில் அல்சர் கட்டிக்கு சாப்பிடுவதாக தெரிவித்துள்ளார். அவர் மாத்திரை சாப்பிடுவதை எந்த வருடம் பார்த்தேன் என்றால் ஞாபகமில்லை. அவர் மாமியாரிடம் கேட்டுள்ளேன் அவர் சொல்லி உள்ளார். ஆனால் பணம் கொடுப்பத்றகு முன்பாக சொல்லி உள்ளதாக ஞாபகம். எதிரியின் மாமியார் பெயர் தற்போது ஞாபகமில்லை.

உங்கள் அப்பா தாக்கல் செய்துள்ள வழக்கின் காசோலை எண் இவ்வழக்கின்

காசோலை எண்ணிற்கு அடுத்த எண் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. நீங்கள் கடன் அளித்து எத்தனை நாட்கள் கழித்து எனது தந்தை கடன் கொடுத்துள்ளார் என்ற விபரம் எனக்கு தெரியாது. உங்கள் அப்பாவிற்கு இந்நீதிமன்றத்தில் பல்வேறு காசோலை வழக்குகள் நிலுவையில் உள்ளது என்றால் அது பற்றி எனக்கு தெரியாது.

உங்கள் அப்பா நான்குநேரி நீதிமன்றத்திற்கு வாய்தாவிற்கு வரும் போது உடன் வந்துள்ளீர்களா என்றால் வண்டி ஓட்ட முடியாமல் இருந்ததால் வந்துள்ளேன். உங்களது தந்தை முட்டுயில் ஆப்ரேஷன் செய்ததால் அவருடன் நான் நீதிமன்றத்திற்கு வந்தேன். 6 மாதம் சிகிச்சையிலிருந்தார். 2 மாதங்கள் வண்டி ஓட்ட முடியாத நிலையில் இருந்தார் அப்போது வந்திருக்கலாம். இந்நீதிமன்றத்தின் வழக்கு எண்ணான STC No.583/2017, 848/2016 ஆகிய வழக்குகள் இந்நீதிமன்றத்தில் தாக்கல் செய்து நிலுவையில் உள்ளது என்றால் வழக்கு எண் தெரியாது இருக்கலாம்.

நான் வள்ளியூர் குற்றவியல் நீதிமன்றத்தில் கவிதா என்பவருக்கு எதிராக காசோலை மோசடி வழக்கு தாக்கல் செய்துள்ளேன் அந்த வழக்கின் எண் STC 1/2020 என்றால் வழக்கு எண் ஞாபகமில்லை. மேற்படி வழக்கானது பணம் கொடுக்கப்பட்டதால் முடிக்கப்பட்டது. எனது தந்தை எதிரியின் கணவரிடம் இலவச வீட்டு மனை பட்டா வாங்கி தருவதாக தெரிவித்துள்ளார் என்ற விபரம்தெரியுமா என்றால் தெரியாது. எதிரியின் கணவர் எனது தந்தை மீது ஏர்வாடி காவல்நிலையத்தில் ஒரு புகார் அளித்திருந்தாரா என்றால் அது பற்றி எனக்கு தெரியாது.

எதிரியின் கணவரிடம் எனது தந்தை இலவச வீட்டு மனை பட்டா வாங்கி தருவதாக சொல்லி எதிரியின் பெயரில் உள்ள நிரப்படாத காசோலையில் கையெழுத்து வாங்கினார் என்ற விபரம் தெரியுமா என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. உங்களுக்கு போதுமான வருமானம் இல்லாததால் இவ்வழக்கில் நான் அளித்ததாக சொல்லப்படும் காசோலையில் உள்ள பணத்தினை கொடுக்க வாய்ப்பில்லை என்றால் சரியல்ல நான் வங்கி பரிவர்த்தனை எடுத்து காட்டுகிறேன்.

நீங்கள் எதிரிக்கு கடன் அளிக்காததால் நான் இவ்வழக்கில் கோரியுள்ள பணம் பெற தகுதிஅற்றவர் என்றால் சரியல்ல. உங்கள் அப்பா எதிரியின் கணவரிடம் இலவச வீட்டு மனை பட்டா வாங்கி தருவதாக கூறி எதிரியின் பெயரில் உள்ள இரண்டு நிரப்படாத காசோலை வாங்கினார் என்றும் அந்த காசோலை திருப்பி தராத காரணத்தினால் எதிரியின் கணவர் உங்கள் தந்தையின் மீது எதிரி ஏர்வாடி காவல்நிலையத்தில் புகார் அளித்தார் என்றும், அதனால் மேற்படி நிரப்படாத

காசோலையில் எதிரியையும் அவருடைய கணவரையும் பழிவாங்க வேண்டும் என்ற எண்ணத்தில் எதிரியின் மீது பொய்யாக வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல.

மகளிர் பெயரில் வழக்கு போட்டால் காசோலையில் உள்ள பணத்தினை கொடுத்துவிடுவார் என்ற எண்ணத்தில் தான் எதிரி பெயரில் காசோலை பெறப்பட்டு இவ்வழக்கு தாக்கல் செய்யப்பட்டது என்றால் சரியல்ல. எதிரி என்னிடம் எந்த பணமும் வாங்கவில்லையென்றும் அதற்கு ஆதாரமாக எந்த காசோலையும் தரவில்லையென்றும் எனது தந்தையிடம் இருக்கும் காசோலையை பெற்று எனது பெயரில் காசோலை பூர்த்தி செய்து பொய்யான சங்கதிகள் தெரிவித்து இவ்வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல.

உங்கள் தந்தை அதிகமான வட்டிக்கு பணத்தினை கந்து வட்டிக்கு அளித்து வருகிறார் என்றும் அதனடிப்படையில் தான் நீதிமன்றங்களில் நிறைய காசோலை வழக்கு பதிவு செய்யப்பட்டது என்றால் தெரியாது. எனது தந்தை இராதாபுரத்தில் எதிரிக்கு எதிராக தாக்கல் செய்த காசோலை வழக்கு பற்றி விபரங்கள் எனக்கு தெரியும் என்றும் இவ்வழக்கிற்காக தெரியாது என்று பொய் சாட்சியம் அளிக்கிறீர் என்றால் சரியல்ல.

எதிரி தரப்பு வழக்கறிஞர் வேண்டுகோளுகிணங்க குறுக்கு விசாரணை ஒத்தி வைக்கபடுகிறது.